بسم الله الرحمن الرحيم    نحمده ونصلي على رسوله الكريم    وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 6 | இதழ் 25

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

13 துல் கஃதா 1442 ஹிஜ்ரி கமரி 24 இஹ்ஸான் 400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 24 ஜூன் 2021


## அல்லாஹ்வின் கட்டளை

وَلِلّٰهِ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا بَيْنَهُمَا ؕ يَخْلُقُ مَا يَشَآءُ ؕ وَاللّٰهُ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ○

வானங்கள் மற்றும் அவற்றிற்கிடையிலுள்ளவை ஆகிய (எல்லா)வற்றின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. அவன் விரும்புவதைப் படைக்கின்றான். மேலும் அல்லாஹ் எல்லாவற்றிற்கும் முழுமையான ஆற்றல் பெற்றவனாவான். (5:18)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**முஸ்லிம்களுக்கிடையே உள்ளுக்குள் தோன்றியுள்ள தவறுகளை அகற்றுவதற்காகவும், இஸ்லாத்தின் உண்மையை உலகின் முன் எடுத்துரைப்பதற்காகவும் வெளியிலிருந்து இஸ்லாத்தின் மீது செய்யப்படுகின்ற ஆட்சேபனைகளுக்கு பதிலளிப்பதற்காகவும் அல்லாஹ் என்னை அனுப்பியுள்ளான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் நோக்கம்

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையிலிருந்து உயிருடன் (கீழே) இறக்கப்பட்டது பற்றியும், இந்த விபத்திலிருந்து தப்பிப்பது தொடர்பாகவும் திருக்குர்ஆனில் சரியான மற்றும் உறுதியான ஞானம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால், கடந்த ஆயிரம் வருடங்களில் இஸ்லாத்தின் மீது எங்கு ஏராளமான துன்பங்கள் வந்தனவோ அங்கு இந்த விவகாரமும் மறைக்கப்பட்டு விட்டது. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் (பூத உடலுடன்) வானத்திற்கு உயர்த்தப்பட்டு விட்டார்கள் என்றும், மேலும் கியாமத் நாளன்று வானத்திலிருந்து (பூத உடலுடன்) இறங்குவார்கள் என்றும் முஸ்லிம்களிடம் துரதிஷ்டவசமாக இந்த எண்ணம் நிலைபெற்று விட்டது. முஸ்லிம்களுக்கிடையே உள்ளுக்குள் ஏற்பட்டுள்ள தவறுகளை அகற்றுவதற்காகவும், இஸ்லாத்தின் உண்மையை உலகின் முன் எடுத்துரைப்பதற்காகவும் வெளியிலிருந்து இஸ்லாத்தின் மீது செய்யப்படுகின்ற ஆட்சேபனைகளுக்கு பதிலளிப்பதற்காகவும் அல்லாஹ் என்னை அனுப்பியுள்ளான். மேலும் ஏனைய பொய் மார்க்கங்களின் உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்காகவும், இறைவன் என்னை அனுப்பியுள்ளான். அதிலும் குறிப்பாக சிலுவை மார்க்கத்தை அதாவது கிறிஸ்துவ மார்க்கத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்த நான் அனுப்பப்பட்டுள்ளேன். மேலும் மனிதர்களுக்கு மிகவும் ஆபத்தான தவறான அதன் கொள்கைகளை அகற்றுவதற்காகவும், மனிதர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு தடையாக உள்ள கொள்கையை அகற்றுவதற்காகவும் நான் தோன்றியுள்ளேன்.

### ஈஸா இப்னு மர்யம் தொடர்பான அசல் நிலை

மஸீஹ் உண்மையிலேயே (விண்ணிலிருந்து பூத உடலுடன்) இறங்கி வருவார் என்ற ஆபத்தான கொள்கையில் துரதிஷ்டவசமாக சில முஸ்லிம்களும் இணைந்து விட்டார்கள். கிறிஸ்துவத்தின் அடித்தளம் என்பது இந்த ஒரே விவகாரத்தில் தான் உள்ளது. ஏனென்றால் கிருஸ்துவத்தின் இரட்சிப்பு என்பது இதே சிலுவையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நமக்காக மஸீஹ் சிலுவையில் மரித்தார் என்றும், பின்னர் அவர் உயிர்தெழுந்து விண்ணிற்கு சென்று விட்டார் என்பதும் அவர்களின் கொள்கையாகும். ஒரு வகையில் அவரது இறைமைக்கான சான்று இதுவே ஆகும் என்று அவர்கள் (கிறிஸ்துவர்கள்) கருதுகின்றனர். தமது தவறின் காரணமாக அவர்களுக்கு உதவி செய்கின்ற முஸ்லிம்கள் மஸீஹ் சிலுவையில் இறந்து விட்டார் என்று ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் அவர் விண்ணிற்கு உயர்த்தப்பட்டார் என்ற அளவில் மட்டும் (முஸ்லிம்கள்) நிச்சயமாக ஏற்றுக் கொள்கின்றனர். இறைவன் என்மீது இந்த உண்மையை வெளிப்படுத்தியுள்ளான். அதாவது மஸீஹ் இப்னு மர்யம் தமது சக காலத்து யூதர்களின் கைகளால் மிகவும் தொல்லைகளுக்கு ஆளானார். அதாவது நல்லடியார்களும் இறைநேசர்களும் தத்தமது காலத்தில் அறிவீனமான எதிரிகளின் கரங்களால் துன்புறுத்தப்படுவதைப் போன்று அவரும் துன்புறுத்தப்பட்டார். இறுதியில் தமது சதித்திட்டங்களாலும், தீங்குகளாலும் எப்படியாவது அவரை தீர்த்துக்கட்டி விட வேண்டும் என்றும், அவரை சிலுவையில் அறைந்து விட வேண்டும் என்றும் அவர்கள் முயற்சிகள் செய்தனர். வெளிப்படையில் அவர்கள் தமது இந்த திட்டங்களில் வெற்றி பெற்றிருந்தார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் மஸீஹ் இப்னு மர்யம் அவர்களை சிலுவையில் அறைவதற்கு கட்டளையிடப்பட்டிருந்தது. ஆனால் அல்லாஹ் தனது அடியார்களையும், தன் புறமிருந்து அனுப்பப்பட்டவர்களையும் ஒருபோதும் வீணாக்குவதில்லை. எனவே ஈஸா இப்னு மர்யமை இந்த சபிக்கப்பட்ட மரணமான சிலுவை மரணத்திலிருந்து அவன் காப்பாற்றி விட்டான். மேலும் அவர் சிலுவையிலிருந்து உயிருடன் இறங்குவதற்கான காரணிகளையும் அவன் உருவாக்கி விட்டான்.

இந்த விஷயத்திற்கு ஆதாரமாக ஏராளமான சான்றுகள் நமக்கு கிடைக்கின்றன. அதிலும் குறிப்பாக புதிய ஏற்பாட்டிலிருந்து நமக்கு இந்த ஆதாரங்கள் கிடைக்கின்றன. தற்போது அதனை எடுத்துரைப்பது எனது நோக்கம் அல்ல. புதிய ஏற்பாட்டில் சிலுவை சம்பவங்களை படிப்பதன் மூலம் ஹஸ்ரத் ஈஸப்னு மர்யம் சிலுவையிலிருந்து உயிருடன் இறங்கினார் என்பதும் நமக்குத் தெளிவாக தெரிய வருகின்றது. மேலும் அந்த நாட்டில் அவருக்கு ஏராளமான எதிரிகள் இருந்தனர். எதிரிகள் என்றாலும் உயிரைக் குடிப்பதற்கு ஆயத்தமாக இருந்த எதிரிகளாக இருந்தனர். நபி தனது சொந்த நாட்டைத் தவிர்த்து வேறெங்கும் இழிவடைவதில்லை என்று அவர் ஏற்கனவே கூறியதற்கேற்ப, அவர் அங்கிருந்து ஹிஜ்ரத் செய்தார். எனவே அந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று அவர் எண்ணம் கொண்டார். தனது நுபுவ்வத் கடமைகளை முழுமைப்படுத்துவதற்காக அவர் பனீ இஸ்ராயீலின் காணாமல் போன ஆடுகளைத் தேடி புறப்பட்டார். நஸீபைன் நோக்கி புறப்பட்டவாறு ஆஃப்கானிஸ்தான் வழியாக காஷ்மீருக்கு வருகை தந்தார். காஷ்மீரில் பனீ இஸ்ராயீல் (கோத்திரத்தார்) வசித்து வந்தனர். அவர்களுக்கு தப்லீக் செய்து கொண்டிருந்தார். மேலும் அவர்களை சீர்திருத்தினார். இறுதியில் அவர்களுக்கு மத்தியில் அவர் மரணித்து விட்டார். இது எனக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள விஷயமாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 303, 304 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் இந்த சாட்சியைப் பகர்வாரோ (அதாவது எவர் கலிமா கூறுவாரோ) அவரைக் கொல்வதிலிருந்து நான் தடுக்கப்பட்டுள்ளேன்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் பத்ர், உஹது மற்றும் அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்**

**காதியான் வெளியீட்டுத் துறையின் துணை நாஸிர் குறைஷி ஃபஸ்லுல்லாஹ் சாஹிப், காதியனைச் சேர்ந்த இயக்கத்தின் முபல்லிக் செய்யத் பஷீருத்துன் அஹ்மத் சாஹிப், ஃபைஸ் அஹ்மத் சாஹிப் ஷானா அவர்களின் மகனாகிய காதியானைச் சேர்ந்த வாழ்வை அர்ப்பணித்த மதிப்பிற்குரிய பஷாரத் அஹ்மத் ஹைதர் சாஹிப், அஹ்மதிய்யா ஜமாஅத் பெஷாவரின் அமீர் மதிப்பிற்குரிய டாக்டர் முஹம்மத் அலி கான் சாஹிப், ரப்வாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முஹம்மத் ரஃபீ கான் ஷஹ்ஸாதா சாஹிப், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அயாஸ் யூனுஸ் சாஹிப், மதிப்பிற்குரிய மியான் தாஹிர் அஹ்மத், UK வின் ரஃபீக் ஆஃப்தாப் சாஹிப், ஜாமிஆ அஹ்மதிய்யா UK வின் ஆசிரியராக இருக்கும் மிர்ஸா நஸீர் அஹ்மத் சாஹிப் சிட்டி மஸீஹ் அவர்களின் துணைவியாரான மதிப்பிற்குரிய ஸரீனா அக்தர் சாஹிபா, மதிப்பிற்குரிய ஹாஃபிழ் முஹம்மத் அக்ரம் சாஹிப், மதிப்பிற்குரிய சவுத்ரி நூர் அஹ்மத் நாஸிர் சாஹிப், ஹக்கிம் உபைதுல்லாஹ் மின்ஹாஸ் சாஹிப் அவர்களின் மகன் மதிப்பிற்குரிய மஹ்மூத் அஹ்மத் மின்ஹாஸ் சாஹிப் ஆகிய மர்ஹூம்களின் நற்குறிப்பை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறியவாறு அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 21 மே 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **21 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு (கடந்த குத்பாக்களில்) சென்று கொண்டிருந்தது. அன்னார் கலந்து கொண்ட போர்கள் தொடர்பாக ஒரு சிலவற்றை எடுத்துரைக்கிறேன். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் பத்ர், உஹது மற்றும் அகழ்ப்போர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். இவை மட்டுமின்றி இன்னும் சில போர்களில் கலந்து கொண்டார்கள். அவற்றில் சில போர்களில் அன்னார் தலைமையும் வகித்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 206 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பத்ர் போருக்காகக் புறப்பட்டபோது, சஹாபிகளிடம் இருந்த ஒட்டகங்கள் மொத்தம் 70. எனவே மூன்று மூன்று பேருக்கு ஓரோர் ஒட்டகம் என ஒதுக்க வேண்டியதிருந்தது. ஒவ்வொருவரும் மாற்றி மாற்றி பயணித்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோர் ஓர் ஒட்டகத்தில் மாறி, மாறி பயணித்தார்கள்.

(அஸீரத்துல் ஹல்பியா பாப் ஸிக்ர் மகாஸியா தொகுதி 2 பக்கம் 204 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் யுத்தத்திற்காகப் புறப்பட்டபோது, அது தொடர்பாக இவ்வாறு வருகிறது:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரியாவின் திசையிலிருந்து வந்து கொண்டிருந்த அபூசுஃப்யானின் வணிகக் குழுவைத் தடுத்து நிறுத்துவதற்காக மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். முஸ்லிம்களின் படைக்குழு ஸஃப்ரான் எனும் பகுதியை அடைந்தபோது, ( இது மதீனாவிற்கு சுற்றுப் புறத்திலுள்ள ஸஃப்ரா எனப்படும் இடத்திற்கு அருகிலிருக்கும் ஒரு பகுதியாகும்) குரைஷியர்கள் தமது வணிகக் குழுவைக் காப்பாற்றுவதற்காகப் புறப்பட்டிருப்பதாகத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்ணியத்திற்குரிய சஹாபிகளிடம் ஆலோசனை கேட்டார்கள். மேலும் அவர்களுக்கு விஷயத்தைத் தெரியப்படுத்தியவாறு அவர்களிடம், மக்காவிலிருந்து ஒரு படைக்குழு அதிவேகமாக புறப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? படைக்குழுவுக்குப் பதிலாக வணிகக்குழு உங்களுக்கு அதிகம் விருப்பமுடையதா? என்று கேட்டார்கள். அவர்கள், ஆம் என்று கூறினார்கள். அதாவது ஒரு குழுவினர், நாங்கள் பகைவர்களை எதிர்கொள்வதைக் காட்டிலும் வணிகக்குழுவை (எதிர்கொள்வதை) அதிகம் விரும்புகிறோம் என்று கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு குறிப்பு கிடைக்கப் பெறுகிறது: ஒரு குழுவினர் தாங்கள் எங்களிடம் போரைப் பற்கிக் கூறியிருந்தால் நாங்கள் அதற்கேற்ப ஆயத்தம் மேற்கெண்டிருப்போமே! நாங்களோ வணிகக்குழுவுக்காகப் புறப்பட்டுள்ளோம் என்று கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் வணிகக்குழுவை நோக்கியே செல்ல வேண்டும். தாங்கள் பகைவர்களை விட்டு விடுங்கள் என்று அவர்கள் கூறினர். இதைக்கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகத்தின் நிறம் மாறிவிட்டது.

ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

இந்த வசனம் இறங்கியதற்கும் இந்தச் சம்பவமே காரணம்:

كَمَآ أَخْرَجَكَ رَبُّكَ مِنْۢ بَيْتِكَ بِالْحَقِّ وَإِنَّ فَرِيْقًا مِّنَ الْمُؤْمِنِيْنَ لَكٰرِهُوْنَ

நம்பிக்கை கொண்டவர்களுள் ஒரு பிரிவினர் முற்றிலும் வெறுத்தபோதிலும் உம் இறைவன் உம் இல்லத்திலிருந்து உம்மை உண்மையுடன் வெளியேற்றினான்.

அப்பொழுது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எழுந்து உரையாடினார்கள். மேலும், மிகச்சிறப்பாக உரையாடினார்கள். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுந்து உரையாடினார்கள். மேலும் மிகச்சிறப்பாக உரையாடினார்கள். பிறகு ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) அவர்கள் எழுந்து இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தங்களுக்கு எதற்குக் கட்டளையிட்டுள்ளானோ அதன் பால் செல்லுங்கள். நாங்கள் தங்களோடு இருக்கிறோம். இஸ்ரவேலர்கள் மூஸாவிடம்,

فَاذۡهَبۡ اَنۡتَ وَ رَبُّكَ فَقَاتِلَاۤ اِنَّا هٰهُنَا قٰعِدُوۡنَ

எனவே நீரும் உமது இறைவனும் சென்று போரிடுங்கள். நாங்கள் இங்கேயே உட்கார்ந்திருப்போம் என்று கூறியது போன்று நாங்கள் கூற மாட்டோம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இல்லை! (அவ்வாறு கூற மாட்டோம்). மாறாக எங்களின் உயிர் இருக்கும் வரை நாங்கள் தங்களோடு இணைந்து போரிடுவோம்.

(அஸீரத்துல் ஹல்பியா பாப் ஸிக்ர் மகாஸியா தொகுதி 2 பக்கம் 205, 206 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

அவர்கள் கைதிகளைப் பிடித்து வந்தபோது, அதாவது பத்ர் போர் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் கைதிகளைப் பிடித்துக் கொண்டு வந்தபோது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரிடம், இந்தக் கைதிகள் தொடர்பாக உங்களுடைய கருத்து என்ன? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் நபியவர்களே! அவர்கள் நமது சிறிய தந்தை வழி உறவுகளும் சொந்த பந்தங்களும் ஆவர். எனது எண்ணப்படி, தாங்கள் அவர்களிடம் ஈட்டுத் தொகை பெற்றுக் கொள்ளுங்கள். அது இந்த நிராகரிப்பாளர்களுக்கு எதிராக நமக்கு ஆற்றலுக்கு காரணியாக அமையும். அண்மையில் அல்லாஹ் அவர்களை இஸ்லாத்தின் பால் வழிநடத்துவான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், கத்தாபின் மகனே! உமது கருத்து என்ன? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இல்லை! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! அபூபக்ரின் கருத்து என்னுடைய கருத்து அல்ல. மாறாக, எனது கருத்து என்னவென்றால், தாங்கள் அவர்களை எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள். நாங்கள் அவர்களின் தலைகளை சீவட்டும். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் அகீலை ஒப்படைத்து விடுங்கள். அவர்கள் அவரது தலையை சீவட்டும். என்னிடம் இன்ன மனிதனை ஒப்படைத்து விடுங்கள். நான் அவரது தலையை சீவி விடுகிறேன் (அந்த மனிதர் மரபு வழியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உறவினராக இருந்தார்) ஏனெனில், இவர்கள் அனைவரும் காஃபிர்களின் வழிகாட்டிகளும் அவர்களின் தலைவர்களும் ஆவர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கூற்றுக்கு முன்னுரிமை அளித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனது கூற்றுக்கு முன்னுரிமை அளிக்கவில்லை. அடுத்த நாள் நான் வந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அமர்ந்து அழுது கொண்டிருந்தார்கள். நான் கேட்டுக் கொண்டேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எந்த விஷயம் தங்களையும் தங்களது தோழர்களையும் அழ வைத்தது? என்று எனக்கு கூறுங்கள். எனக்கு அழுகை வந்தால் நானும் அழுவேன். இல்லையெனில், நான் தாங்கள் இருவரும் அழுவதுபோன்று அழக்கூடிய முகபாவனையை ஏற்படுத்திக் கொள்வேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் அழுவதற்கான காரணம் என்னவென்றால், உமது தோழர்கள் அவர்களிடமிருந்து ஈட்டுத் தொகையைப் பெற வேண்டும் என்ற ஆலோசனையை என் முன் வைத்தனர். எனக்கு முன்னால் அவர்களுக்கான தண்டனை அந்த மரத்தை விட அருகில் முன் வைக்கப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகிலிருந்த அந்த மரம். அப்போது அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்.

مَا كَانَ لِنَبِيٍّ اَنۡ يَّكُوۡنَ لَهٗۤ اَسۡرٰى حَتّٰى يُثۡخِنَ فِى الۡاَرۡضِ

நாட்டில் போர் செய்து இரத்தம் சிந்தாதவரை சிறைப்பிடிப்பதென்பது எந்த நபிக்கும் ஏற்றதல்ல.

பிறகு அடுத்த இரண்டு வசனங்களை விட்டு விட்டு இவ்வாறு உள்ளது:

فَكُلُوۡا مِمَّا غَنِمۡتُمۡ حَلٰلًا طَيِّبًا

உங்களுக்குப் போரில் கிடைக்கும் பொருள்களுள் அனுமதிக்கப்பட்டதாகவும், தூய்மையானதாகவும் இருப்பதனை உண்ணுங்கள்.

ஆக அல்லாஹ் அவர்களுக்குப் போர்ச் செல்வங்களை ஆகுமானதாக ஆக்கிவிட்டான். இது சஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பாகும்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஜிஹாத் வஸ்ஸைர், ஹதீஸ் எண். 4588)

இந்த ஹதீஸின் ஆரம்பச் சொற்கள் இருக்கின்றனவே! அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அழுது கொண்டிருந்தார்கள் என்பதை அடுத்து வரக்கூடிய திருக்குர்ஆன் வசனங்களின் சொற்கள் மற்றும் அவற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ள கருத்து; ஆகியவை இந்த அறிவிப்பைச் சந்தேகத்திற்குரியதாக ஆக்கிவிடுகின்றன. தெளிவாக்கவில்லை. விஷயம் தெளிவாகவில்லை.

எவ்வாறிருப்பினும் இந்த அறிவிப்பை சரியானது எனக்கருதி பெரும்பாலான வரலாற்று நூல்களிலும் வாழ்க்கை வரலாற்று நூல்களிலும் விரிவுரையாளர்கள், அல்லாஹ் பத்ர் போர் கைதிகளிடமிருந்து ஈட்டுத் தொகையைப் பெற வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்ட தீர்மானத்தில் கோபத்தை வெளிப்படுத்தி, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருத்தை விரும்பினான் என்பதுபோன்று கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதுபவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருத்துக்கேற்ப எந்தெந்த திருக்குர்ஆனின் வனங்கள் இறங்கின? என்று ஒரு தனி தலைப்பை அமைக்கும்போது, அவற்றில் இந்த ஒன்றும் எழுதப்பட்டுள்ளது. அதாவது பத்ர் போர் கைதிகள் தொடர்பாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருத்துக்கு அல்லாஹ் முன்னுரிமை வழங்கினான். ஆனால் இது தெளிவற்றதாகும். நான் கூறியதுபோன்று விஷயம் தெளிவாகவில்லை. மாறாக, வரலாற்றாசிரியர்களும் விரிவுரையாளர்களும் இதைப் புரிவதில் தவறிழைத்திருப்பதாகத் தெரிகிறது.

எவ்வாறிருப்பினம், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது தொடர்பாகக் கூறியிருப்பது, அன்னாருடைய அச்சிடப்படாத ஒரு திருக்குர்ஆன் விளக்கவுரைக் குறிப்பிலிருந்து குறிப்பாக கிடைக்கப் பெறுகிறது. அது இந்த அறிவிப்புகளை மறுக்கிறது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் விளக்கமே சரியாகத் தெரிகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அந்தஸ்தை

உயர்த்துவதற்காக இந்த மக்கள் அறிவிப்புகளை தேவையில்லாமல் உண்டாக்கிக் கொண்டதாகவோ அல்லது இவர்களால் தவறாக புரிந்து கொள்ளப்பட்டதாகவோ தெரிகிறது.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அதிகாரம் அன்ஃபாலின் இரண்டாவது வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகிறார்கள்:

இஸ்லாம் தோன்றுவதற்கு முன்னர் அரபு நாட்டில் ஒரு வழக்கம் இருந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

அந்தோ பரிதாபம்! உலகின் சில பகுதிகளில் இதுவரை, இது (இந்தப் பழக்கம்) இருந்து வருகிறது. அதாவது போர் நடைபெறவில்லை என்றாலும் கூட சண்டை நடைபெறவில்லை என்றாலும் கூட கைதிகளாகப் பிடித்துக் கொள்கின்றனர். மேலும் அவர்களை அடிமைகளாக்கிக் கொள்கின்றனர்.

இந்த வசனம் இந்த அறுவறுப்பான சம்பிரதாயத்தை நீக்குகிறது. மேலும் தெள்ளத் தெளிவான சொற்களில், போர் நிலையில் மட்டுமே! மேலும், சண்டை நடந்த பிறகே! பகைவர்களின் ஆட்களைக் கைதிளாகப் பிடிக்க முடியும். போர் நடைபெறவில்லை என்றால், எந்த மனிதரையும் கைதியாக்குவது ஆகுமானதல்ல என்று கட்டளை பிறப்பிக்கிறது.

இந்த வசனத்திற்கு பெரும் தவறான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அன்னார் கூறுகிறார்கள்: முஸ்லிம்கள் பத்ர் போரின்போது மக்கத்தினரில் சிலரைக் கைதிகளாகப் பிடித்துக் கொண்டு வந்தனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம், அவர்கள் தொடர்பாக என்ன முடிவெடுப்பது? என்று ஆலோசனை கேட்டார்கள்.

அவர்களைக் கொன்று விட வேண்டும் என்பது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருத்தாக இருந்தது. ஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டு விட்டு விட வேண்டும் என்பது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்தாக இருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்து பிடித்து விட்டது. இது அதிகாரம் அன்ஃபாலின் 68 வது வசனமாகும். அதில் இவ்வாறு உள்ளது. நாட்டில் போர் செய்து இரத்தம் சிந்தாதவரை சிறைப்பிடிப்பதென்பது எந்த நபிக்கும் ஏற்றதல்ல.

எவ்வாறிருப்பினும், இதற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

இதில் பெறப்பட்ட ஆலோசனையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆலோசனை வேறுபட்டதாகவும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆலோசனை வேறுபட்டதாகவும் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆலோசனை பிடித்து விட்டது. மேலும் ஈட்டுத் தொகையைப் பெற்று விட்டு கைதிகளை விட்டு விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஆனால் இந்த வசனம் இறங்கியபோது, அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயலை விரும்பவில்லை என்றும் கைதிகளைக் கொன்றிருக்க வேண்டும். ஈட்டுத் தொகையை பெற்றிருக்கக்கூடாது என்பது போன்றும் (மக்கள்) கூறினார்கள். இது தப்ரியின் விளக்கவுரையில் உள்ளது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: ஆனால் இந்த விளக்கவுரை தவறானது. முதல் விஷயம் என்னவென்றால், ஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டு விட்டு விடக்கூடாது என்று எந்தவொரு கட்டளையையும் அல்லாஹ் இறக்கவில்லை. எனவே ஈட்டுத் தொகையை ஏற்றுக் கொண்டதால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எந்தப் பழியும் வந்திருக்க முடியாது.

இரண்டாவது விஷயம், இதற்கு முன்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நக்லா என்ற பகுதியில் இரண்டு நபர்களிடமிருந்து ஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டு அவர்களை விடுவித்திருந்தார்கள். இறைவன் அன்னாரின் இந்த செயலை வெறுக்கவில்லை.

மூன்றாவது விஷயம், வெறும் இரண்டு விஷயங்களுக்குப் பிறகு இறைவன் முஸ்லிம்களுக்கு போர்ச் செல்வங்களில் கிடைக்கப்பெற்ற செல்வத்தை அனுமதிக்கப்பட்டதாகவும், தூய்மையானதாகவும் ஆக்கி விட்டான் என்பதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஈட்டுத் தொகை பெற்றதை இறைவன் வெறுத்தான் என்ற விஷயமும் எவருடைய கற்பனையிலும் கூட வர முடியாது. ஆக இந்த விளக்கமே தவறானது. மேலும் சரியான விளக்கம் இதுவாகும். அதாவது இந்த வசனத்தில் முறையாக போர் நடைபெற்று பகைவர்களுக்குப் பேரடி கொடுத்து அவர்களைத் தோல்வியடையச் செய்திருக்க வேண்டும் என்ற ஒரு பொது விதி நியமிக்கப்பட்டுள்ளது.

(தர்ஸ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி), சூரா அன்ஃபால், ரிஜிஸ்டர் எண். 36 பக்கம் 968, 969)

திருக்குர்ஆன் விரிவுரையாளர்களில் அல்லாமா இமாம் ராஸீ அவர்கள் மற்றும் பிரசித்தி பெற்ற வரலாற்று ஆசிரியரான அல்லாமா ஷிப்லீ நுஃமானீ ஆகியோருடைய கருத்தும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்துரைத்த இந்த கருத்தாகவே உள்ளது.

(அல்லாமா இமாம் ராஸி அவர்களின் தஃப்ஸீர் கபீர் தொகுதி 8 பக்கம் 158 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் அஹ்மத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

மதீனா சென்றடைந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்த கைதிகளை என்ன செய்ய வேண்டும்? என்று கைதிகள் தொடர்பாக ஆலோசனை செய்தார்கள். அரபு நாட்டில் பொதுவாக கைதிகளைக் கொலை செய்து விடுகின்ற அல்லது நிரந்தரமாக அடிமையாக வைத்துக் கொள்ளும் வழக்கம் இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இயல்புக்கு இந்த விஷயம் முற்றிலும் பிடிக்காமலிருந்தது. மேலும் தற்சமயம் வரை அது தொடர்பாக எந்த இறைக் கட்டளைகளும் இறங்கியிருக்கவில்லை.

எனது கருத்துப்படி ஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டு அவர்களை விட்டு விட வேண்டும். ஏனெனில் கடைசியில் இவர்கள் அனைவரும் தமது உற்றார் உறவினர்தானே! நாளை இவர்களிலிருந்தே இஸ்லாத்திற்காகத் தம்மை அர்ப்பணித்துக கொள்ளக்கூடியவர்கள் உருவாகி விடுவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த கருத்தை எதிர்த்தார்கள். மார்க்க விவகாரத்தில் எந்த உறவு முறையும் கருத்தில் கொள்ளப்படக்கூடாது. இந்த மக்கள் தமது செயல்களால், கொல்லப்படுவதற்கு உரியவர்களாகி விட்டார்கள். எனவே எனது கருத்துப்படி இவர்கள் அனைவரையும் கொன்று விட வேண்டும். இன்னும் சொல்வதென்றால், முஸ்லிம்கள் சுயமாக தமது கைகளால் தத்தமது உறவினர்களைக் கொலை செய்ய வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டும் என்று அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவக்ரள் தமது இயல்பிலுள்ள கருணையினால் தாக்கமடைந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆலோசனையை விரும்பினார்கள். மேலும் கொலை செய்வதற்கு எதிராகத் தீர்ப்பளித்தார்கள்.

மேலும் எந்த இணை வைப்பவர்கள் தமது ஈட்டுத் தொகை முதலியவற்றை செலுத்தி விடுவார்களோ அவர்களை விட்டு விட வேண்டும் என்று ஆணையிட்டார்கள். ஆக பின்னர் இதற்கு ஏற்பவே

இறை கட்டளையும் இறங்கியது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் முஸீஹ் (ரலி) அவர்களும் எழுதியிருப்பதுபோன்று, இறை கட்டளையும் ஈட்டுத் தொகை கொடுப்பது தொடர்பாக இறங்கி விட்டபோது, பிறகு அந்த ஹதீஸை அடிப்படையாகக் கொண்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அழுதார்கள் என்பதை நியாயப்படுத்துவது வினோதமான விஷயமாக உள்ளது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

ஆக, ஒவ்வொருவரின் நிலைக்கேற்பவும் 1000 திர்ஹமிலிருந்து 4000 திர்ஹம் வரை அவரவரது ஈட்டுத் தொகை நிர்ணயிக்கப்பட்டு விட்டது. இவ்வாறு அனைத்து கைதிகளும் விடுதலையாகி விட்டனர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 367, 368)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகன் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் திருமணம் நடைபெற்றது தொடர்பாக இவ்வாறு குறிப்பு கிடைக்கப் பெறுகிறது.

ஹஃப்ஸா (ரலி) அவர்களின் கணவர் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். போரிலிருந்து திரும்பி வந்த பிறகு நோயுற்று மரணித்து விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களைத் திருமணம் செய்தார்கள். இதன் விவரம் புகாரியில் இவ்வாறு இடம் பெற்றுள்ளது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகன் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் குனைஸ் பின் ஹுஸைஃபா சஹ்மி அவர்களை இழந்து விதவையானபோது, (குனைஸ் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபியைச் சேர்ந்தவராக இருந்தார்கள். பத்ர் போரில் கலந்து கொண்டிருந்தார்கள். மதீனாவில் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள்.)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களைச் சந்தித்து, அவர்களிடம் ஹஃப்ஸாவைப் பற்றி எடுத்துரைத்து, நீங்கள் விரும்பினால் உமரின் மகள் ஹஃப்ஸாவை உங்களுக்கு நிக்காஹ் செய்து தரட்டுமா? என்று கேட்டேன். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், நான் இந்த விஷயத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் பல நாட்கள் வரை காத்திருந்தேன். நான் இந்த நாட்களில் திருமணம் செய்யாமலிருப்பதே எனக்குப் பொருத்தமாகத் தெரிகிறது என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சில நாட்களுக்குப் பிறகு கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் (இவ்வாறு கூறி வந்தார்கள்:) பிறகு, நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைச் சந்தித்து, நீங்கள் விரும்பினால் உமரின் மகள் ஹஃப்ஸாவை உங்களுக்கு நிக்காஹ் செய்து தரட்டுமா? என்று கேட்டேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மௌனமாகி விட்டார்கள். எனக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எனக்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை விட இவர்களிடம் அதிகம் உணர்வு ஏற்பட்டது. அதாவது அவர்களும் நிராகரித்து விட்டார்களே என்று அதிகம் உணர்வு ஏற்பட்டது. பிறகு நான் சில நாட்கள் காத்திருந்தேன். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களுடன் நிக்காஹ் செய்து கொள்வதற்கான திருமணத் தூது அனுப்பினார்கள். நான் அன்னாருடன் அவர்களுக்கு நிக்காஹ் செய்து வைத்து விட்டேன். நிக்காஹ் நடந்த பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னைச் சந்தித்து கூறினார்கள்:

நான் இல்லை என்று கூறியதனால், மறுத்ததனால் நீங்கள் ஏதோ உணர்ந்தீர்கள் போலும்! நீங்கள் ஹஃப்ஸாவைப் பற்றி கூறியபோது, நான் உங்களுக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை. அப்போது ஆமாம்! உணர்ந்தேன் என்று நான் கூறினேன். உண்மையில் நீங்கள் முன் வைத்த விஷயம் தொடர்பாக உங்களக்கு பதிலளிப்பதிலிருந்து இந்த ஒரு விஷயத்தைத் தவிர என்னை எதுவும் தடுக்கவில்லை. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களைப் பற்றிக் கூறியிருந்தார்கள் என்பது எனக்குத் தெரிந்திருந்தது. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த இரகசியத்தை வெளிப்படுத்தக் கூடியவனாக இருக்கவில்லை என்று ஹஸ்ரத் அபூபக்ர்வ் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களை மணமுடிக்கவிருப்பதாக வெளிப்படுத்தியது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

ஆக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இரகசியமாக இருந்தது. என்னால் இதை வெளிப்படுத்தியிருக்க முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை கைவிட்டிருந்தால், பிறகு கண்டிப்பாக நான் உங்களுடைய இந்த வரனை ஏற்றுக் கொண்டிருப்பேன்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி, ஹதீஸ் எண் 4005)

இவ்வாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள். இந்த சம்பவத்துக்கு விளக்கத்தை ஓரளவு சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலிலும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் மகள் ஒருவர் இருந்தார்கள். அவர்கள் பெயர் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) ஆகும். அவர்கள் குனைஸ் பின் குஸாஃபா அவர்களின் மனைவியாக இருந்தார்கள். (குனைஸ்) அவர்கள் ஒரு கலப்பற்ற சஹாபியாகத் திகழ்ந்தார்கள். பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். பத்ருக்குப் பிறகு மதீனா திரும்பி வந்த பிறகு, ஹஸ்ரத் குனைஸ் (ரலி) அவர்கள் நோயுற்றார்கள். அந்த நோயிலிருந்து அவர்களால் மீள முடியவில்லை.

அவர்களின் வஃபாத்திற்கு சில காலங்களுக்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களின் மறுமணத்தைப் பற்றிய கவலை ஆட்கொண்டது. அப்போது ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களுக்கு 20 வயதுக்கு மேல் இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது இயல்பின் எளிமை காரணமாக தாமே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைச் சந்தித்து, எனது மகள் ஹஃப்ஸா தற்போது விதவையாகி உள்ளார். நீங்கள் விரும்பினால், அவருடன் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தவிர்த்து விட்டார்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடமும் கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மௌனமாக இருந்தார்கள். எந்த பதிலும் அளிக்கவில்லை. இதனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு மிகவும் துயரம் ஏற்பட்டது. அவர்கள் இதே துயர நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் ஆஜராகி அன்னாரிடம்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

நடந்த அனைத்தையும் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உமரே! கவலை ஏதும் கொள்ளாதீர். இறைவனுக்கு சம்மதம் என்றால், ஹஃப்ஸாவுக்கு உஸ்மான் மற்றும் அபூபக்ரை விட சிறந்த கணவர் கிடைத்து விடுவார். மேலும் உஸ்மானுக்கு ஹஃப்ஸாவை விடச் சிறந்த மனைவி கிடைப்பார்.

இதை அன்னார் ஏன் கூறினார்கள் என்றால், அன்னார் தாம் ஹஃப்ஸா (ரலி) அவர்களை மணமுடித்துக் கொள்ளவும் தமது மகள் ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுப்பதற்கும் எண்ணம் கொண்டிருந்தார்கள். அதைப்பற்றி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகிய இருவருக்கும் தகவல் தெரிந்திருந்தது. எனவே தான் அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முன் வைத்த விஷயத்தை தவிர்த்து விட்டார்கள். இதற்குச் சில காலங்களுக்குப் பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு தமது மகள் ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களை மணமுடித்துக் கொடுத்து விட்டார்கள்.

பிறகு அன்னார் சுயமே தம் தரப்பிலிருந்து தாம் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களை மணமுடிப்பதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குத் திருமணத் தூது அனுப்பினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இதை விட அதிகம் வேறு என்ன வேண்டியிருந்தது. அவர்கள் மிகவும் மகிழ்ச்சியோடு இந்த வரனை ஏற்றுக் கொண்டார்கள். ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டில் ஷஃபான் மாதம், ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் திருமண பந்தத்தில் வந்து, நபியின் துணைவியார்களைச் சேர்ந்தவர்களாகி விட்டார்கள்.

இந்தத் திருமணம் நடந்த பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், உங்கள் உள்ளத்துக்கு என் தரப்பிலிருந்து ஏதாவது துயரம் ஏற்பட்டிருக்கலாம். விஷயம் என்னவென்றால், எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எண்ணம் குறித்த தகவல் தெரிந்திருந்தது. ஆனால் அன்னாரின் அனுமதியின்றி என்னால் அன்னாருடைய இரகசியத்தை வெளிப்படுத்த முடியவில்லை. எனினும், அன்னாருடைய எண்ணம் இதுவாக இல்லாமலிருந்திருப்பின் பிறகு நான் மனமகிழ்ச்சியோடு ஹஃப்ஸாவை மணமுடித்திருப்பேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களின் நிக்காஹ்வில் ஒரு சிறப்பான நன்மைக்குப் பொருத்தமான விஷயம் என்னவாக இருந்ததென்றால், அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகளாவார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களோ ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அடுத்த படியாக அனைத்து சஹாபிகளிலும் சிறந்தவர்களாகக் கருதப்பட்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சிறப்பான நெருக்கத்திற்குரியவர்களில் ஒருவராக இருந்தார்கள். எனவே பரஸ்பர தொடர்புகளை அதிகம் வலுப்படுத்துவதற்காகவும், ஹஸ்ரத் குனைஸ் பின் ஹுஃஸாஃபா (ரலி) அவர்களின் திடீர் மரணத்தினால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களுக்கும் ஏற்பட்டிருந்த பெருந்துயரத்தை அகற்றுவதற்காகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஃப்ஸா (ரலி) அவர்களைத் தாமே மணமுடித்துக் கொள்வதைப் பொருத்தமானதாகக் கருதினார்கள்.

இரண்டாவது பொதுவான ஒரு நன்மைக்குப் பொருத்தமான விஷயம் என்னவாக இருந்ததென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எத்துனை அதிகம் துணைவியர்கள் இருப்பார்களோ அந்த அளவே மனித குலத்தின் பாதி பகுதியான, இன்னும் சொல்வதென்றால், சில கோணங்களில் சிறந்த பாதி பகுதியான பெண்களில், இறைவன் பால் அழைத்தல், தப்லீக் செய்தல், மார்க்கக் கல்வி வழங்குதல் ஆகியவற்றிற்கான பணிகள் மிகவும் விசாலமான வகையிலும் அதிகம் எளிமையாகவும் அதிகம் சிறப்பாகவும் நடைபெற முடியும்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 477, 478)

உஹது போர் குறித்து, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. உஹது போரின்போது காலித் பின் வலீத் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்தபோது, முஸ்லிம்களால் அந்தத் திடீர் தாக்குதலால் சுதாரிக்க முடியவில்லை. இதற்கான விளக்கத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

குரைஷியர்களின் படை ஏறத்தாழ நாலாப்புறமும் சுற்றிவளைத்திருந்தது. தமது படிப்படியான தாக்குதல்களால் ஒவ்வொரு கணமும் அழுத்திக் கொண்டே வந்தது. இதனாலும் கூட ஒருவேளை சிறிது நேரத்திற்குப் பிறகு முஸ்லிம்கள் சுதாரித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் என்ன வியப்பு ஏற்பட்டதென்றால், குரைஷியர்களின் ஒரு துணிச்சலான போர் வீரன் அப்துல்லாஹ் பின் கமிய்யா என்பவன் முஸ்லிம்களின் கொடியேந்துபவரான ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தான். அவர்கள் கொடியை ஏந்திக் கெண்டிருந்தார்கள். அவன் தனது வாள் வீச்சால் அவர்களின் வலக்கையை வெட்டி வீழ்த்தினான்.

முஸ்அப் அவர்கள் உடனடியாக மற்ற கையால் கொடியை ஏந்திக் கொண்டு இப்னு கமிய்யாவை எதிர்ப்பதற்காக முன்னோக்கிச் சென்றார்கள். ஆனால் அவன் இரண்டாவது வாள் வீச்சால் அவர்களின் இரண்டாவது கையையும் வெட்டி வீழ்த்தி விட்டான். இதனால் முஸ்அப் தமது இரண்டு வெட்டுண்ட கைகளையும் இணைத்து, கீழே விழுந்தாவறு இஸ்லாமியக் கொடியைத் தாங்க முயன்றார்கள். அதை நெஞ்சோடு இணைத்துக் கொண்டார்கள்.

இதனால் இப்னு கமிய்யா, அவர்கள் மீது மூன்றாவது முறை வாள் வீசினான். இம்முறை முஸ்அப் ஷஹீதாகி விழுந்து விட்டார்கள். வேறு ஒரு முஸ்லிம் உடனடியாக முன்னோக்கி வந்து கொடியை பிடித்துக் கொண்டார். ஆயினும் ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்களின் புறத்தோற்றம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு ஒத்துப்போனது. இப்னு கமிய்யா தான் முஹம்மத் (ஸல்) அவர்களைக் கொன்று விட்டதாகக் கருதினான். அல்லது இந்த விஷயம் வெறும் தீங்கிழைப்பதற்காகவும், ஏமாற்றும் எண்ணத்திலும் அவன் தரப்பிலிருந்து செய்யப்பட்டிருப்பதற்கும் சாத்தியமுள்ளது.

எவ்வாறிருப்பினும், முஸ்அப் அவர்கள் ஷஹீதாகி விழுந்தபோது, நான் முஹம்மத் (ஸல்) அவர்களைக் கொன்று விட்டேன் என்று அவன் கூச்சலிட்டான். இந்தச் செய்தியால் முஸ்லிம்களின் எஞ்சியிருந்த துணிவும் அகல ஆரம்பித்தது. அவர்களின் குழுமம் முற்றிலும் சிதறிப் போய் விட்டது. பல சஹாபா பதற்றமடைந்து போர்க் களத்திலிருந்து ஓடி விட்டார்கள்.

அப்பொழுது முஸ்லிம்கள் மூன்று பாகங்களாகப் பிரிந்திருந்தனர். ஒரு குழுவோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான(தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விப்பட்டு போர்க்களத்தில் இருந்து ஓடி விட்டது. ஆனால் இந்தக் குழு மற்றெல்லாரையும் விட மிகவும் குறைவாக இருந்தது. ஆனால் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளபடி, அந்த நேரத்தின் குறிப்பிட்ட நிலைமைகள், அம்மக்களின் உள்ளத்து ஈமான் மற்றும் கலப்பற்ற தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு அல்லாஹ் அவர்களை மன்னித்து விட்டான்.

இரண்டாவது குழுவில் இருந்தவர்கள் ஓடிவிடவில்லை. எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான(தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விப்பட்டு ஒன்று துணிவிழந்து அமர்ந்து விட்டிருந்தனர். இல்லையெனில், தற்பொழுது சண்டையிடுவதை வீணானதாகக் கருதினர். எனவே

போர்க்களத்திலிருந்து ஒருபுறம் அகன்று கவலைத் தோய்ந்து அமர்ந்து விட்டனர்.

மூன்றாவது குழுவோ தொடர்ச்சியாகப் போரிட்டுக் கொண்டிருந்தது. அவர்களில் சிலரோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி ஒன்று கூடியிருந்தனர். மேலும் தன்னிகரில்லா வாழ்வை அர்ப்பணித்தலின் திறமையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். பெரும்பாலானவர்களோ போர்க்களத்திலிருந்து கலைந்து சென்று போரிட்டுக் கொண்டிருந்தனர்.

அவர்களுக்கும், இரண்டாவது குழுவைச் சேர்ந்தவர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிரோடு இருப்பது தெரியவர, அந்த மக்கள் பித்தர்களைப் போன்று சண்டையிட்டவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் ஒன்றுகூடி வந்தனர். எவ்வாறிருப்பினும், அப்பொழுது மிகவும் பயங்கரமான போர் நடந்து கொண்டிருந்தது. முஸ்லிம்களுக்கும் பெரும் சோதனைக்குரிய நேரமாக அது இருந்தது. ஏற்கனவே கூறப்பட்டுவிட்டதற்கு ஏற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதான(தாகக் கூறப்பட்ட) செய்தியைக் கேள்விப்பட்டு பல சஹாபிகள் துணிவிழந்து விட்டிருந்தனர்.

மேலும் ஆயுதங்களை வீசிவிட்டு போர்க்களத்தை விட்டு விலகி ஒருபுறம் அமர்ந்து விட்ட அந்த மக்களிலேயே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஒருவராக இருந்தார்கள். ஆக இந்த மக்கள் இவ்வாறே போர்க்களத்தின் ஒரு புறம் அமர்ந்திருந்தார்கள். அப்போது மேலிருந்து ஒரு சஹாபி அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் வந்து விட்டார்கள். மேலும் அந்த மக்களைப் பார்த்து, நீங்கள் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டார்கள்.

அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். இப்பொழுது போர் புரிந்து என்ன கிடைக்கப் போகிறது? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இது தான் போர் புரிவதற்கான தருணம், இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெற்ற அந்த மரணம் நமக்கும் கிடைக்கப் பெற வேண்டும். மேலும் அன்னாருக்குப் பிறகு வாழ்க்கையின் இன்பம் தான் என்ன இருக்கிறது?


பிறகு அவர்களுக்கு முன்னால் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் வந்தார்கள். அப்பொழுது அவர்கள் அதாவது ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: சஅதே! எனக்கோ மலைக்குன்றிலிருந்து சொர்க்கத்தின் நறுமணம் வருகிறது. இதைக் கூறிவிட்டு ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் பகைவர்களின் வரிசைக்குள் நுழைந்து விட்டார்கள். சண்டையிட்டவாறே ஷஹீதாகி விட்டார்கள்.

போருக்குப் பிறகு அவர்களின் உடலில் 80 க்கும் அதிகமான காயங்கள் காணப் பெற்றன. அது யாருடைய பிரேதம் என்பதை எவரும் அடையாளம் காணமுடியாமலிருந்தது. இறுதியில், அவர்களின் சகோதரி அவர்களின் விரலைப் பார்த்து அடையாளங்கண்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 493 – 495)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

உஹது போரின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சில சஹாபிகளோடு மலைக் கணவாயைச் சென்றடைந்து தான் இருந்தார்கள். அப்போது, நிராகரிப்பாளர்களின் ஒரு கூட்டம் மலைக்கணவாய் மீது தாக்குதல் தொடுத்து விட்டது. அவர்களில் காலித் பின் வலீதும் இருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது இவ்வாறு துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ اِنَّهٗ لَا يَنْۢبَغِيْ لَهُمْ اَنْ يَّعْلُوْنَا

அதாவது அல்லாஹ்வே! இந்த மக்கள் எங்களை வந்தடையாமல் இருப்பார்களாக!

இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சில முஹாஜிர்களோடு இணைந்து அந்த இணை வைப்பவர்களை எதிர் கொண்டார்கள். அவர்களை விரட்டியடித்து விட்டார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 537 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: ஆபூசுஃப்யான் தனது சில கூட்டாளிகளை அழைத்துக் கொண்டு முஸ்லிம்கள் ஒன்று கூடியிருந்த அந்த மலைக் கணவாயை நோக்கி புறப்பட்டார். அதற்கு அருகில் நின்று கொண்டு, முஸ்லிம்களே! உங்களில் முஹம்மத் (ஸல்) அவர்கள் உள்ளாரா? என்று உரத்த குரலில் கேட்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யாரும் பதிலளிக்க வேண்டாம் என்று அறிவுறுத்தினார்கள். ஆக அனைத்து சஹாபிகளும் மௌனமாக இருந்தார்கள். பிறகு அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிக் கேட்டார். இதற்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கிணங்க யாரும் பதிலளிக்கவில்லை. இதனால் அவர் உரத்த குரலில் ஆணவமான தொனியில், இவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டடனர். ஏனெனில் அவர்கள் உயிரோடு இருந்திருந்தால், பதிலளித்திருப்பார்கள் என்று கூறினார்.

அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவர்கள் தம்மையும் அறியாமல், அல்லாஹ்வின் எதிரியே! நீ பொய்யுரைக்கிறாய்! நாங்கள் அனைவரும் உயிரேடு இருக்கிறோம். மேலும் இறைவன் எங்கள் கைகளால் உன்னை இழிபடுத்தி விடுவான் என்று கூறினார்கள்.

அபூ சுஃப்யான், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குரலை அடையாளங்கண்டு கொண்டு, உமரே! உண்மையாக சொல்லும். முஹம்மத் (ஸல்) அவர்கள் உயிரோடு இருக்கிறாரா? என்று கேட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் அருளால் அன்னார் (ஸல்) அவர்கள் உயிரோடு இருக்கிறார்கள். மேலும் உனது இந்தப் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள்.

பிறகு இப்னு கமிய்யா பொய் கூறியுள்ளான். ஏனெனில் நான் உம்மை அவனை விட உண்மை பேசுபவராகக் கருதுகிறேன் என்று அபூசுஃப்யான் ஓரளவு மெல்லிய குரலில்கூறினார். இதற்குப் பிறகு அபூசுஃப்யான் மிகவும் உரத்த குரலில் اُعْلُ هُبَلْ அதாவது ஹுபுல் சிலையே உனது மகிமை உயரட்டும் என்று முழங்கினான். சஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலைக் கருத்திற் கொண்டு அமைதி காத்தனர். ஆனால் தமது பெயர் எடுக்கப்படும்போது அமைதிகாக்குமாறு கட்டளையிட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனுக்கு எதிராக சிலையின் பெயர் வந்தபோது அமைதியிழந்தார்கள். மேலும் நீங்கள் ஏன் பதிலளிப்பதில்லை? என்று கேட்டார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் என்ன பதில் கூறட்டும்? என்று சஹாபிகள் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், اَللّٰهُ اَعْلٰى وَاَجَلّ (அதாவது உயர்வும்

மேன்மையும் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தானது) என்று கூறும்படி கூறினார்கள்.

அபூசுஃப்யான் لَنَا الْعُزّٰى وَلَا عُزّٰى لَكُمْ (அதாவது எங்களுடன் உஸ்ஸா சிலை உள்ளது. உங்களோடு உஸ்ஸா சிலை இல்லை) என்று கூறினான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபிகளிடம் கூறினார்கள்:

اَللّٰهُ مَوْلٰنَا وَلَا مَوْلٰى لَكُمْ அதாவது உஸ்ஸா சிலை என்ன! எங்களோடு அல்லாஹ் உதவியாளனாக இருக்கிறான். உங்களோடு எந்த உதவியாளரும் இல்லை என்று கூறுங்கள்.

இதற்குப் பிறகு அபூசுஃப்யான் கூறினார்: போர் ஒரு வாளினைப் போன்றது. சிலவேளை மேலெழுகிறது; சிலவேளை கீழே விழுகிறது. ஆகவே இந்த நாளை பத்ர் நாளுக்கு பதிலடியாக நினைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் போர்க்களத்தில் சிதைக்கப்பட்ட உங்களது சடலங்களைக் காண்பீர்கள். நான் இவ்வாறு செய்யுமாறு கட்டளையிடவில்லை. ஆனால் இவ்வாறு செய்திருப்பதாக எனக்கு தெரிய வந்தபோது, எனக்கு எனது ஆட்களின் இந்த செயல் தவறாகப் படவில்லை. எங்களுக்கும் உங்களுக்கும் மத்தியில் அடுத்த வருடம் இதே நாட்களில் பத்ர் போர்க்களத்தில் மீண்டும் போருக்காக வாக்குறுதி தரப்படுகிறது.

ஒரு சஹாபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலின்கீழ், மிக நல்லது! இந்த வாக்குறுதி தரப்படுகிறது என்று கூறினார்கள். எவ்வாறிருப்பினும் அபூசுஃப்யான் தமது கூட்டாளிகளை அழைத்துக் கொண்டு கீழே இறங்கி விட்டார். பிறகு குரைஷியர்களின் படை மக்காவை நோக்கி பயணமானது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 498, 499)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போருக்குப் பிறகு மதீனா வந்தடைந்தபோது, நயவஞ்சகர்களும், யூதர்களும் மகிழ்ச்சியைக் கொண்டாட ஆரம்பித்தனர். மேலும் முஸ்லிம்களை வசைமாறி பொழிய ஆரம்பித்தனர். மேலும் கூறினார்கள்: முஹம்மத் (ஸல்) அவர்கள் அரசாட்சியை வேண்டுகிறார்கள். அவர்கள் இழப்படைந்த அளவுக்கு இன்று வரை எந்த நபியும் இழப்படையவில்லை. தாமும் காயமுற்றார்கள்; அவர்களின் தோழர்களும் காயமுற்றார்கள். மேலும் கொலையுண்ட உங்கள் மக்கள் எங்களோடு இருந்திருந்தால் ஒருபோதும் கொலையுண்டிருக்க மாட்டர்கள் என்று கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இந்த நயவஞ்சர்களைக் கொல்வதற்கு அனுமதி கோரினார்கள். இவ்வாறு இவர்கள் பேசுகிறார்களே என்று. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்கள் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் எவரும் இல்லை என்றும் நான் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சி பகர்வதை வெளிப்படுத்தவில்லையா? இந்த மக்கள் கலிமா கூறுகிறார்கள் தானே? என்று கேட்டார்கள்.

இதைக்கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஏனில்லை! இவர்கள் இதைக் கூறத்தான் செய்கிறார்கள். ஆனால் அத்துடன் நயவஞ்சகமான விஷயங்களையும் பேசுகிறார்கள். ஆனால் இவர்கள் வாளின் அச்சத்தால் கூறுகிறார்கள். ஆக, இவர்களின் விவகாரம் வெளிப்பட்டு விட்டது. இவர்களின் உள்ளத்தின் விஷயங்கள் வெளிப்பட்ட விட்ட பிறகு, அல்லாஹ் இவர்களின் வஞ்சகத்தை வெளிப்படுத்தி விட்ட பிறகு இவர்களைக் பழிவாங்க வேண்டும். இவர்களுக்குத் தண்டனையளிக்க வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் இந்த சாட்சியைப் பகர்வாரோ, அவரைக் கொல்வதிலிருந்து நான் தடுக்கப்பட்டுள்ளேன்.

(அஸீரத்துல் ஹல்பியா பாப் ஸிக்ர் மகாஸியா தொகுதி 2 பக்கம் 348 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

கலிமா கூறிவிட்ட நபரைக் கொல்வதிலிருந்து நான் தடுக்கப்பட்டுள்ளேன். இந்தக் குறிப்பு இனி வருங்காலங்களில் தொடரும். இன்ஷா அல்லாஹ். தற்போது நான் சில மர்ஹூம்களைப் பற்றி எடுத்துரைக்க வேண்டியுள்ளது. எனவே இங்கே முடித்துக் கொள்கிறேன். ஆனால் அதற்கு முன்னர் நான் அநீயிழைக்கப்பட்ட பாலஸ்தீனர்களுக்காக துஆ செய்யுங்கள் என்று கூறியிருந்தேன். போர் நிறுத்தப்பட்டு விட்டது தான். ஆயினும், வரலாறு நமக்குக் கூறுவதாவது, சில காலங்களுக்குப் பிறகு எங்கிருந்தாவது, ஏதாவது ஒரு வகையில், ஏதாவது ஒரு சாக்குப்போக்கு கூறி பகைவர்கள் இந்த பாலஸ்தீனர்களை அநீதிக்கு இலக்காக்கிக் கொண்டேயிருக்கின்றனர். ஏதாவதொரு காரணம் உருவாகிக் கொண்டே இருக்கிறது.

அல்லாஹ் கருணை புரிவானாக. பாலஸ்தீனர்களுக்கும் உண்மையான சுதந்திரம் கிடைக்கட்டுமாக. அல்லாஹ் அவர்களுக்கு அறிவும் புத்திக்கூர்மையும் வலிமையும் கொண்ட, தனது விஷயத்தை எடுத்துரைக்கக்கூடிய மற்றும் தமது உரிமைகளைப் பெறக்கூடியவர்களாவும் இருக்கும் தலைவர்களை வழங்குவானாக.

இவ்வாறு அநீதிக்கு இலக்காகிக் கொண்டிருக்கும் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள் குறிப்பாக பாகிஸ்தானில் உள்ளவர்கள்; அவர்களுக்காக அதிகம் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக.

ஜனாஸாக்களில் இன்று முதலாவது குறிப்பு காதியான் வெளியீட்டுத் துறையின் துணை நாஸிர் குரைஷி ஃபஸ்லுல்லாஹ் சாஹிப் அவர்களுடையது. இவர்கள் ஏப்ரல் 27 அன்று வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

ஹஸ்ரத் முன்ஷீ மெஹர் தீன் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். அன்னார் மர்ஹூமின் தாயாரின் தந்தைவழிப் பாட்டனார் ஆவார்கள். ஹஸ்ரத் முன்ஷீ மெஹர் தீன் சாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக இவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. மேலும் மினாரத்துல் மஸீஹ் கட்டுவதற்காக சந்தா கொடுத்தவர்களிலும் அவர்களது பெயர் எழுதப்பட்டுள்ளது.

ஜாமிஆவிலிருந்து தேர்ச்சி பெற்ற பிறகு குரைஷி சாஹிப் அவர்கள் 23 ஆண்டுகள் 5 மாதங்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கற்பிக்கும் பணியை செய்தார்கள். திருக்குர்ஆன், உருது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்கள், அரபு இலக்கணம், அரபு மொழியாக்கம் முதலிய பாடங்களைக் கற்பித்தார்கள். இவர்களின் மொத்த தொண்டு காலம் 37 ஆண்டுகள் 7 மாதங்கள் ஆகிறது. அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் துணைவியார் மட்டுமின்றி 1 மகன் மற்றும் 2 மகள்கள் உள்ளனர்.

இவர்கள் தொடர்பாக நாஸிர் நஷ்ரோ இஷாஅத் மக்தூம் சாஹிப் அவர்கள் எழுகிறார்கள்: ஜாமிஆவில் இருந்தபோது மிகவும் பரிவு காட்டும் ஆசிரியராக இருந்தார்கள். மாணவர்களோடு மிகவும்

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

அன்பு மற்றும் நட்புரீதியான பழக்கம் இருந்தது. தோழமை கொண்டிருந்தார்கள். எப்பொழுதும் மிகவும் நேர்மையுடன் வக்ஃபின் ஆன்மாவோடு பணிபுரிவார்கள். நேரத்தைப் பேணி வந்தார்கள். மாணவர்களையும் நேரத்தைப் பேண வைத்தார்கள். இந்தியாவின் பெரும்பாலான முபல்லிக்கள் இவர்களின் மாணவர்கள் ஆவார்கள். இவர்களிடமிருந் அவர்கள் பயன் பெற்றார்கள்.

இவர்களின் இயல்பில் மிகவும் எளிமை இருந்தது. உரையாடலில் சுருக்கம் இருந்தது. அதிகம் பேச மாட்டார்கள். ஆனால் இவர்களின் பேச்சு மிகவும் அறிவுப்பூர்வமானதாகவும் ஆதாரப்பூர்வமானதாகவும் இருந்து வந்து. இவர்களுக்கு இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் துணை சத்ராக தொண்டாற்ற வாய்ப்பு கிடைத்தது. 34 ஆண்டுகள், நீண்ட காலமாக பத்ர் பத்திரிகையின் துணை ஆசிரியராகத் தொண்டாற்ற நல்வாய்ப்பு பெற்றார்கள். மிஷ்காத்தின் ஆசிரியராகவும் இருந்தார்கள். இந்தியாவின் அஹ்மதிய்யத் வரலாற்றுக் குழுவின் உறுப்பினராகவும் இருந்தார்கள். ரூஹானீ கஸாயினுடைய Computerized பதிப்பு வெளியானபோது அதில் இவர்கள் சில Proof Reading பிழைகளைக் கண்டறிந்தார்கள். இதற்குப் பிறகு இவர்கள் கூறியதற்கேற்ப அதில் திருத்தங்களும் செய்யப்பட்டன.

மிகவும் நுணுக்கமான கண்ணோட்டத்துடன் ஒவ்வொன்றையும் பார்த்து வந்தார்கள். Proof Reading பார்த்து வந்தார்கள். தனித்தனியாக வெளியான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை முழுமையாக Proof Reading பார்த்துள்ளார்கள். குறிப்பாக பராஹீனே அஹ்மதிய்யா, ஆரியா தர்ம், சத்பச்சன் முதலியவை. இந்த நூல்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தரப்பிலிருந்து வழங்கப்பட்டுள்ள ஆதாரங்களை அவை எடுக்கப்பட்ட அசல் இடங்கள், கிரந்தங்கள், வேதங்கள் ஆகியவற்றிலிருந்து மிகவும் நுணுக்கமாக சரிபார்த்தவாறு ஒவ்வொரு சொற்களின் உச்சரிப்பு மற்றும் மொழியாக்கத்தில் ஏற்பட்டு வந்த வித்தியாசங்களை அடிக்கோடிட்டு வந்தார்கள்.

ஒவ்வொரு விவகாரத்திலும் தமது ஆய்வை உச்சம் வரை எட்ட வைப்பது இவர்களின் தனிச்சிறப்பாக இருந்தது. ஆரியதர்ம், சத்பச்சன் ஆகியவற்றின் ஆதாரங்களைத் தேடுவது, ஆய்வு செய்வது, சரி பார்ப்பது ஆகியவற்றை மிகவும் கடினமாக உழைத்து இவர்கள் பார்த்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த நூல்கள் இந்துக்கள் மற்றும் ஆரியர்களுக்குச சான்றாக முன்வைக்கப்பட்டுள்ளன. 2 நூல்கள் இவ்விரு மதங்களுக்கு நிகராக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. எனவே இவற்றை மிகவும் நுணுக்கமான முறையில் சரிபார்க்க வேண்டும். ஆதாரங்களை சரிபார்க்க வேண்டும் என்று இவர்கள் கூறி வந்தார்கள்.

இப்போது, நம் சார்பாக கத்தே மன்ஸூர் எனப்படும் எழுத்து வடிவில் வெளியிடப்பட்டுள்ள திருக்குர்ஆனின் Software-ஐ தயாரிப்பதிலும் இவர்களின் தொண்டு அதிகம் உள்ளது. மும்பையின் கம்பெனியிலிருந்து தயாரிக்கப்பட்டது. அதில் இவர்கள் அதிகம் பணிபுரிந்துள்ளார்கள்.

இரவு பகலாக இவர்கள் அதை சீரமைப்பதிலும், சரி செய்வதிலும், அழகுபடுத்துவதிலும் பணிபுரிந்துள்ளார்கள். இவ்வாறு கத்தே மன்ஸூர் எனப்படும் எழுத்து வடிவில், மொழியாக்கம் இல்லாத குர்ஆனோ வெளிவந்து விட்டது. இப்போது மௌலவி ஷேர் அலி சாஹிப் அவர்களின் ஆங்கில மொழியாக்க திருக்குர்ஆனையும் தயார் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். அதுவும் கிட்டத்தட்ட தயார் நிலையில் உள்ளது. விரைவாக முடிந்து விடும். இன்ஷா அல்லாஹ். அதில் இவர்களின் பணி அதிகம் உள்ளது.

இவ்வாறே மீர் இஸ்ஹாக் சாஹிப் அவர்களின் மொழியாக்கத்தின் சில ஜுஸ்களையும் இவர்கள் செய்து முடித்து விட்டார்கள். திருக்குர்ஆனின் வெளியீட்டுப் பணியிலும், குறிப்பாக கத்தே மன்ஸூர் எனப்படும் எழுத்து வடிவ திருக்குர்ஆனை வெளியிடுவதிலும், இவர்கள் மிகவும் கடினமாக உழைத்து பணியாற்றினார்கள்.

இவர்களின் வெளியீட்டுத் துறை நாஸிர் எழுதுகிறார்கள்: என்னுடைய ஆசிரியராகவும் எனது துணைவியாரின் மாமாவாகவும் இருந்தார்கள். இவ்வாறு இருந்தும் கூட துணை நாஸிர் என்ற வகையில் எப்பொழுதும் கட்டுபடுதலுக்கான உணர்வு, மிகவும் பணிவு மற்றும தன்னடக்கத்தோடு பேசுவார்கள். நான் உங்களுடைய ஆசிரியர் அல்லது உங்களுக்கு மூத்தவன் என்று ஒருபோதும் கூறியதில்லை.

இவர்களின் மாணவர்களில் சிலர் எழுதுகிறார்கள்: இவர்கள் ஜாமிஆவில் கல்வி பயின்றுக் கொண்டிருந்த மாணவப் பருவத்தில் ஒரு நாளும் விடுப்பு எடுத்ததில்லை என்பதை வகுப்பில் கூறி வந்தார்கள். இதற்குப் பிறகு ஜாமிஆவில் கற்பிக்கும் காலத்திலும் ஒருபோதும் விடுப்பு எடுக்கவில்லை. அல்லாஹ் மர்ஹூம் அவர்களோடு பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

இரண்டாவது குறிப்பு, இயக்கத்தின் முபல்லிக் சய்யித் பஷீருத்துன் அஹ்மத் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்களும் காதியனைச் சேர்ந்தவர்கள். 83 வது வயதில் இறைநியதிக்கு ஏற்ப வஃபாத் ஆகிவிட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் சய்யித் சயீதுத்தீன் சாஹிப் (ரலி) அவர்களின் மகன்வழிப் பேரராவார்கள். மிக அதிகமாக இறைவழிபாடு செய்யக்கூடியவராகவும், தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும், துஆ செய்யக்கூடியவராகவும் எளிய இயல்புடைய மனிதராகவும் இருந்தார்கள். மர்ஹூம் மூஸியாகவும் இருந்தார்கள். மூன்று மகன்களைப் பின்விட்டுச் சென்றுள்ளார்கள். மூன்று மகன்களும் அஞ்சுமனுடைய அலுவலகங்களில் பணியாற்றுகிறார்கள்.

அடுத்த குறிப்பு ஃபைய்ஸ் அஹ்மத் சாஹிப் ஷானா அவர்களின் மகன், காதியானைச் சேர்ந்த வாழ்வை அர்ப்பணித்தவரான மதிப்பிற்குரிய பஷாரத் அஹ்மத் ஹைதர் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் 71 வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அடையாளமான, வெறி நாய் கடிக்கப்பெற்ற (பிறகு குணமடைந்த) ஹஸ்ரத் அப்துர் கரீம் சாஹிப் அவர்களின் மகன்வழிப் பேரராவார்கள். இவர்கள் வாழ்வை அர்ப்பணித்து கர்நாடகாவிலிருந்து காதியான் வந்தார்கள். பிறகு மத்ரஸா அஹ்மதிய்யாவில் கல்வி பயின்ற பிறகு பல்வேறு அலுவலகங்களில் பணியற்றினார்கள்.

பிறகு இவர்கள் ரிஷ்தா நாத்தா (திருமண பந்தத்) துறையின் இன்சார்ஜாக நியமிக்கப்பட்டார்கள். அங்கு தொண்டாற்றினார்கள். 46 ஆண்டுகள் வரை இயக்கத்துக்குத் தொண்டாற்றினார்கள்.


**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

வழிவகைகள் குறைவாக இருந்தபோதிலும் மிகவும் ஒழுக்கமான இயல்போடு எளிமையாக வாழ்வைக் கழித்தார்கள். மிகவும் எளிமையான வாழ்க்கையாக இருந்தது. மிகவும் நல்லொழுக்கம் கொண்டவராகவும், நன்மை செய்ய விரும்பும் மனிதராகவும் இருந்தார்கள். மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். துணைவியார் மட்டுமின்றி மூன்று மகன்கள் உள்ளனர். அவர்களை இவர்கள் நன்றாகப் படிக்கவும் வைத்தார்கள். பிறகு அவர்கள் அனைவரையும் வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள்.

அடுத்த குறிப்பு அஹ்மதிய்யா ஜமாஅத் பெஷாவரின் அமீர் மதிப்பிற்குரிய டாக்டர் முஹம்மத் அலி கான் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் கடந்த மாதம் 68 வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்கள் R.S.C மாணவராக இருந்தபோது தாமே பைஅத் செய்தார்கள். இவர்கள் கூறுகிறார்கள்: அங்கு நான் எனது பெரியப்பா கடையில் அமர்ந்திருந்தேன். அப்போது ஒரு நபர் வந்தார். அவர் மிகவும் கண்ணியத்திற்குரியவராக இருந்தார். அவர் சென்ற பிறகு இவர்களிடம், உனக்குத் தெரியுமா? இவர் காதியானி. காதியானிகள் மிகவும் நல்ல மக்களாவார்கள் என்று பெரியப்பா கூறினார்.

இவர்கள் கூறுகிறார்கள்: இது ஜமாஅத்தோடு எனக்கு ஏற்பட்ட முதல் அறிமுகம். பிறகு மருத்துவக் கல்லூரியில் இவர்களின் ஒரு வகுப்புத் தோழர் அஹ்மதியாக இருந்தார். அவர் இவர்களிடம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாகக் கேட்டார். உங்களுடைய கண்ணோட்டம் என்ன? உயிரோடு இருப்பதாக நம்புகிறீர்களா? அல்லது மரணித்து விட்டதாக நம்புகிறீர்களா? என்று கேட்டார். அப்போது டாக்டர் முஹம்மத் அலி சாஹிப் அவர்கள் கூறினார்கள்: நான் அவர்களை மரணித்து விட்டதாக நம்புகிறேன்.

இதைக் கேட்ட மாணவருக்கு, அஹ்மதி மாணவருக்கு, பிறகு இவர்களுக்கு தப்லீக் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்தது. எவ்வாறிருப்பினும் அவர் இவர்களை மிஷன் ஹவுஸுக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஜமாஅத்தைப் பற்றி அறிமுகம் செய்து வைத்தார். அங்கு முரப்பி பஷாரத் பஷீர் சிந்தீ சாஹிப் இருந்தார்கள். இவர்கள் அவர்களை Pant Shirt அணிந்திருக்கக்கண்டு, மௌலவியாகவும் இருக்கிறார். மிகவும் Modern மௌலவியாகவும் இருக்கிறாரே என்று தாக்கத்திற்குள்ளானார்கள்.

எவ்வாறிருப்பினும் அவர் அதாவது பஷாரத் பஷீர் அஹ்மத் சாஹிப் இவர்களுக்கு தஃவத்துல் அமீர் என்ற நூலைப் படிப்பதற்காகக் கொடுத்தார்கள். இவர்கள் கூறுகிறார்கள்: நான் படிக்க ஆரம்பித்தபோது படித்து முடித்தவுடனேயே அஹ்மதிய்யத் உண்மையானது என்று அன்றே எனக்கு உறுதி ஏற்பட்டு விட்டது.

1973 இல் இவர்கள் பைஅத் செய்தார்கள். 1974 இல் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) இவர்களின் பைஅத்தை ஏற்றுக் கொண்டார்கள். 1974 இல் இவர்கள் அஹ்மதி ஆகிவிட்ட பிறகு அதில் குழப்பங்களும் ஆரம்பித்து விட்டன. இவர்களின் கல்லூரி இளைஞர்கள் குழுவாக இவர்களைப் பிடித்து, அஹ்மதிய்யத்தை நிராகரித்து விடு (அஹ்மதி என்று தெரிந்து விட்டது.) இல்லையென்றால் உன்னைக் கொன்று விடுவோம்; ஷஹீதாக்கிவிடுவோம் என்று கூறினர்.

எவ்வாறிருப்பினும் கல்லூரி நிர்வாகத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அச்சமயம் பல்கலைக்கழகத்தின் Chancellor ஆக இருந்த பாச்சா கான் அவர்களின் மகன் அலிகான் அங்கு வந்தார். இவர்களை மக்களிடமிருந்து விடுவித்துத் தம்மோடு அழைத்துச் சென்றார். தமது வாகனத்தில் நகரத்துக்கு வெளியில் சென்று இவர்களை விட்டு விட்டார்.

இவர்கள் கூறுகிறார்கள்: அங்கிருந்து வெறும் காலோடு பொடி நடையாக நான் எனது கிராமத்தை அடைந்தேன். அப்போது நீ உன்னையும் கஷ்டத்தில் ஆழ்த்திக் கொள்கிறாய்; எங்களுக்கும் அவப்பெயரை உண்டாக்குகிறாய். ஏன் அஹ்மதிய்யத்தை விட்டு விடுவதில்லை? என்று தந்தை கூறினார்கள். அதற்கு இவர்கள், என்னால் அஹ்மதிய்யத்தை விட முடியாது என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் இவர்கள் கூறுகிறார்கள்: என்னுடைய தந்தையுடன் விவாதம் நடந்து கொண்டிருந்தது. நிலைமைகள் மோசமாக இருந்ததன் காரணமாக கல்வியையும் தொடர முடியவில்லை. மிகவும் மோசமான நிலைமை இருந்தது. ஆனால் அஹ்மதிய்யத்தில் நிலைபெற்றிருந்தேன்.

ஒரு நாள் இவர்களின் தந்தையார் கூறினார்: பார்! இந்தப் பிரச்சனையை முடித்து விடு. அஹ்மதிய்யத்தை விட்டு விடு. அப்போது அவர்கள் கூறினார்கள்: இதை முடிவுக்கு கொண்டு வருவதற்கு என்னிடம் ஒரேயொரு தீர்வு தான் இருக்கிறது. நீங்கள் எனக்கு உணவு அனுப்பி வைக்கும்போது, அதில் விஷம் கலந்து விடுங்கள். நான் மரணிக்கட்டும்; உங்கள் பிரச்சனை தீரட்டும். ஏனெனில் என்னால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களையும் அன்னாரின் ஜமாஅத்தையும் விட முடியாது. இவர்கள் இவ்வாறு தனது தந்தையிடம் கூறினார்கள்.

இதற்குப் பிறகு இவர்களின் தந்தை இவர்களிடம் ஒருபோதும் அஹ்மதிய்யத்தை விட்டுவிடு என்று கூறவில்லை. இவர்களின் தந்தையார் வஃபாத் ஆனபோது இவர்கள் அவருடைய வஃபாத்திற்கு சென்றார்கள். ஆனால் ஜனாஸா தொழவில்லை. மக்கள் இது குல வழக்கங்களுக்கு முற்றிலும் மாற்றமானது. எப்படிப்பட்ட மகன்! தந்தையின் ஜனாஸா தொழவில்லை! என்று கூறி மிகவும் வெறுப்பை வெளிப்படுத்தினார்கள். அப்போது அவர்கள் கூறினார்கள்: எனக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் முக்கியத்துவம் கொண்டுள்ளார்கள். மற்ற அனைவரும் (அன்னாருக்குப்) பிறகு தான்.

இவ்வாறே இவர்களின் தாயார் இவர்களோடு மிகவும் கொடுமையாக நடந்து கொண்டார்கள். அவர்கள், நீ என்னுடைய மகன் இல்லை என்று கூறினார்கள். பிறகு இவர்களை எல்லாவற்றிலிருந்தும் சொத்து முதலியவற்றிலிருந்தும் விலக்கி வைத்து விட்டார்கள். இவர்கள் அதற்குப் பிறகு கிராமத்துக்கு செல்லவில்லை. ஆனால் தமது தாயாருக்கு உதவி செய்து வந்தார்கள். மேலும் தமது பெரியப்பா வீட்டுக்குச் சென்று வந்தார்கள். அங்கிருந்து தாயாரை கவனித்துக் கொண்டார்கள். அவர்களுக்குப் பொருளுதவியும் செய்து வந்தார்கள்.

அவர்கள் மரணித்த போதும் அவர்களின் ஜனாஸாவையும் தொழவில்லை. இவ்வாறே இவர்கள் தமது ஒரு தம்பியையும் அஹ்மதியாக்கி விட்டிருந்தார்கள். அவரும் ஜனாஸா தொழவில்லை. பிறகு எப்படிப்பட்ட மகன் என்று மீண்டும் மக்கள் ஆட்சேபனை செய்தார்கள். ஆனால் இவர்கள் இதைத்தான் கூறினார்கள்: அதாவது இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏசி வந்தார்கள். எனவே எங்களால் ஜனாஸா தொழ முடியாது என்று கூறி அன்னார் அசாதாரணமான தன்மானத்தை வெளிப்படுத்திக் காட்டினார்கள்.

இவர்கள் 27 ஆண்டுகள் இராணுவத்தில் பணிபுரிந்தார்கள். லெஃப்டெனன்ட் கர்னல் பதவியில் Retired ஆனார்கள். டாக்டராக இருநதார்கள். Retirement-ன்போது, இவர்களுக்கு சிறப்பு மிலிட்ரி தலைமை பதக்கமும் கிடைத்தது. இதற்குப் பிறகு இவர்கள் பெஷாவரில் Naseer Teaching Hostel இல் துணை பேராசிரியராகவும் பணிபுரிந்து வந்தார்கள். மேலும உளவியல் துறையின் துறைத் தலைவராகவும் இருந்தார்கள்.

இவர்களை 32 வயதில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் சர்ஹத், பெஷாவர் மாவட்டம் மற்றும் பெஷாவர் ஜமாஅத்திற்கு அமீராக நியமித்தார்கள். 1985 இல் இவர்களை வக்ஃபே ஜதீதின் Board of Director ஆக

நியமித்தார்கள். வஃபாத் வரை இந்த பொறுப்பிலேயே இருந்தார்கள். வக்ஃபே ஜதீத் Board of Directors உடைய உறுப்பினராக இருந்தார்கள். இவ்வாறே ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷன், தாஹிர் ஃபவுண்டேஷன் மற்றும் Standing Shoora ஆகியவற்றின் உறுப்பினராகவும் இருந்தார்கள். இவர்களின் தம்பி கர்னல் அய்யூப் சாஹிப் அவர்கள், அவர்களைப் பற்றி நான் கூறியிருந்தேன். அவர்களும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். இவர்களின் திருமணம் சர்ஹத் மாநிலத்தின் அமீரான ஷம்ஸுத்தீன் கான் சாஹிப் அவர்களின் மகளோடு நடைபெற்றது. இவர்கள் பின்விட்டுச் சென்றவர்களில் ஒரு மகன் மற்றும் மூன்று மகள்கள் உள்ளனர். மகன் வக்ஃபே நவ்வில் உள்ளார். இன்றைய நாட்களில் Humanity First இன் ஏற்பாட்டின்கீழ் தன்ஸானியாவில் தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார்.

இவர் எழுதுகிறார்: டாக்டர் முஹம்மத் அலி கான் சாஹிப் அவர்கள் உண்மை, நேர்மை, தன்னலமின்மை மற்றும் கள்ளம் கபடமில்லாத தன்மை ஆகியவற்றில் தனது ஒரு தனி அந்தஸ்தைக் கொண்டிருந்தார்கள். செல்வம், செலவுகள், உலக செல்வங்கள் அல்லது எந்த விஷயத்தைப் பற்றியும் ஒருபோதும் பேசமாட்டார்கள். இந்த விஷயத்தையே இவர்களின் ஒவ்வொரு பிள்ளைகளும் எழுதியுள்ளார்கள்.

எப்பொழுதும் மிகவும் நிம்மதியோடும், மகிழ்ச்சியோடும் வாழ்க்கையை கழித்தார்கள். இவர்கள் பெஷாவரின் எல்லா விதமான நிலைமைகளிலும், மிகவும் கஷ்டமான நிலைமைகளிலும் மிகவும் அன்போடும் இறைவனின் உதவி மற்றும் ஆதரவின் மீது நம்பிக்கை வைத்தவாறும் பெஷாவர் ஜமாஅத்தை வழிநடத்தினார்கள். இவர்களின் வஃபாத்தால் பெஷாவர் மக்கள் மிகவும் துயரமடைந்துள்ளார்கள்.

கிலாஃபத்தோடு அளவு கடந்த தொடர்பு இருந்தது. இவர்களின் கட்டுப்படுதலும் முன்னுதாரனமாக இருந்து. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனும் அன்பின் தொடர்பு இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனும் அன்பின் தொடர்பு இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நேசத்தின் தொடர்பு மற்றும் அல்லாஹ்வின் ஏகத்துவத்திற்காக எல்லாத் தியாகங்களுக்காகவும் ஆயத்தமாக இருந்தார்கள். எண்ணற்ற சிறப்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள்.

அடுத்த குறிப்பு ரப்வாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முஹம்மத் ரஃபீ கான் ஷஹ்ஸாதா சாஹிப் அவர்களுடையதாகும். அவர்கள் மார்ச் 30 அன்று வஃபாத் ஆகிவிட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

மர்ஹூம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபிகளான ஹஸ்ரத் குலாம் ரஸூல் சாஹிப் ஆஃப்கானீ (ரலி) மற்றும் ஆயிஷா படானீ சாயிபா (ரலி) ஆகியோரின் மகள்வழிப் பேரராவார்கள். மேலும் புஸூர்க் சாஹிப் என்று பிரசித்தி பெற்றிருந்த ஹஸ்ரத் அப்துஸ் ஸத்தார் கான் சாஹிப் அவர்களின் மகள்வழிக் கொள்ளுப் பேரரும் ஆவார்கள்.

இறைவழிபாடு செய்யக்கூடியவர், இளமையிலேயே தஹஜ்ஜுத் தொழக்கூடியவராக இருந்தார்கள். மார்க்கத்துக்கான தன்மானம் கொண்டவராக இருந்தார்கள். மிகவும் உத்வேகம் கொண்டவராக இருந்தார்கள். மிகத் தூய இயல்புக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். இப்பொழுது, இறுதி நோயில் மருத்துவமனையில் மூச்சுவிட சிரமப்பட்டுக் கொண்டிருந்த பொழுதிலும் கூட திருக்குர்ஆனை உரத்த குரலில் ஓதிக் கொண்டிருந்தார்கள்.

அன்னார் அபுதாபியில் விமானப்படையில் பணியமர்த்தப்பட்டபோது, சில காலங்களுக்குப் பிறகு அன்னார் அபுதாபி சென்று விட்டார்கள். அங்கு விமானப் படையின் அசெம்பிளியில் ஒரு மௌலவி, காதியானிகள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்று கூறினார். இவர்கள் மிகவும் துணிச்சலோடு எழுந்து நின்று, நான் அஹ்மதியாவேன். என்னைக் கொல்லுங்கள் என்று கூறினார்கள். ஆனால் எவ்வாறிருப்பினும் பிறகு அங்கிருந்து அவர்கள் தாமே பணிவிலகி விட்டார்கள். மேலும் பாகிஸ்தான் வந்து விட்டார்கள். இங்கு வந்து தமது Medical Store–ஐ திறந்தார்கள்.

இந்தக் காலகட்டத்தில் ராஜ்கீ கிழக்கு தாருர் ரஹ்மத்தின் வட்டார சத்ராகவும் இருந்தார்கள். MTA நிகழ்ச்சியான பஷ்த்தூ மொழியின் கலந்துரையாடலில் ஏறக்குறைய 50 எபிஸோடுகளில் கலந்து கொண்டுள்ளார்கள். பகுதியின் ஒவ்வொரு நபரோடும் இவர்களுக்கு மிகவும் பரிவான மற்றும் தந்தையைப் போன்ற பழக்கம் இருந்தது. மக்களுக்கு மௌனமாக பொருளுதவி செய்து வந்தார்கள். மூஸியாக இருந்தார்கள். துணைவியார் மட்டுமின்றி, 2 மகன்கள் மற்றும் 4 மகள்களைப் பின்விட்டுச் சென்றுள்ளார்கள்.

அடுத்த குறிப்பு, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அயாஸ் யூனுஸ் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் மார்ச் 24 அன்று ஆஸ்திரேலியாவின் மாநிலமான நியூ சவுத் வேல்ஸில் வெள்ள நீரில் மூழ்கியதன் காரணமாக வஃபாத் ஆகிவிட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

மிகவும் தொண்டு செய்யக்கூடிய இளைஞராக இருந்தார்கள். இவர்கள் சத்ர் சாஹிப் அவர்களிடம், உங்களுக்கு எந்த வேலைக்குத் தேவைப்பட்டாலும் சரி, எனக்கு எப்போது கட்டளையிட்டாலும் ஆஜராகிவிடுவேன் என்று கூறினார்கள். எப்பொழுதும் எந்நேரமும் தொண்டு செய்ய ஆஜராகக் கூடியவராக இருந்தார்கள். மேலும் ஒவ்வொருவரிடமும், எனது வீட்டுக் கதவுகள் திறந்துள்ளன. எப்பொழுது உதவி தேவைப்பட்டாலும் வந்து விடுங்கள் என்று கூறி வைத்திருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் அதிகதிகமாக உதவி செய்யக்கூடியவராக இருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும் இளைஞராக இருந்தார்கள். தற்போது திருமணம் ஆகியிருக்கவில்லை. இவர்களின் வஃபாத்தின்போது அரசாங்கம் பெற்றோருக்கு பாகிஸ்தானிலிருந்து வருவதற்கு Visa வும் கொடுத்தது. மேலும் அரசாங்க பிரதிநிதிகளின் முன்னிலையில் இவர்களின் நல்லடக்கம் நடைபெற்றது.

அடுத்த குறிப்பு மியான் குர்பான் ஹுஸைன் சாஹிப் அவர்களின் மகன் மியான் தாஹிர் அஹ்மத் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் ரப்வாவின் வக்காலத்தே மால் ஸாலிஸின் முன்னாள் ஊழியராக இருந்தார்கள். இங்குள்ள நமது இஸ்லாமாபாதில் Project Engineer ஆக இருக்கும் இத்ரீஸ் அஹ்மத் சாஹிப் அவர்களின் தந்தையாவார்கள். இவர்கள் 67 வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

உள்ளூர் ஜமாஅத்தில் தர்பிய்யத் செயலராக இருந்தார்கள். துணை சத்ராகவும், ஸயீம் அன்ஸாருல்லாஹ்வாகவும் தொண்டாற்றி வந்தார்கள். தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும், நஃபில்களை நிறைவேற்றக் கூடியவராகவும் முறையாக திருக்குர்ஆன் ஓதக்கூடியவராகவும் இருந்தார்கள். மர்ஹூம் மூஸியாவார்கள். துணைவியார் மட்டுமின்றி, 2 மகள்களையும், 3 மகன்களையும் பின்விட்டுச் சென்றுள்ளார்கள்.

அடுத்த குறிப்பு UK வின் ரஃபீக் ஆஃப்தாப் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் ஃபாரூக் ஆஃப்தாப் சாஹிப் அவர்களின் தந்தையாவார்கள். இவர்களும் கடந்த ஏப்ரல் மாதத்தில் தமது 63 வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

ஃபாரூக் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: எனது தந்தையார் பல சிறப்புகளைக் கொண்டிருந்தார். பணிவானவர், நல்லொழுக்கமுடையவர், ஒவ்வொருவருடனும் பழகக்கூடியவர், முகமலர்ச்சியுடையவர் மற்றும் கண்ணியத்திற்குரியவராக இருந்தார். நல்லியல்புடையவராக இருந்தார். மக்களுக்குக் கண்ணியமளிக்கக்

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 24 June 2021 Issue No. 25

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கூடியவராகவும், விருந்தோம்பல் செய்யக்கூடியவராகவும் இருந்தார்கள். பல மக்கள் எங்களுக்கு ஃபோன் செய்து இதைத்தான் கூறினார்கள். இந்த சிறப்புகளுக்கே சான்றளித்தார்கள்.

மிகவும் கலப்பற்றறவராகவும், மாய்த்து கொள்ளக்கூடியவராகவும் இருந்தார்கள். கிலாஃபத்துக்கு அருகில் இருப்பதன் பால் எப்பொழுதும் பிள்ளைகளுக்கும் கவனமூட்டினார்கள். மேலும் இதன் விளைவாகவே பிள்ளைகள் ஜமாஅத்துக்கும் தொண்டாற்றி வந்தார்கள்.

அடுத்த குறிப்பு ஜாமிஆ அஹ்மதிய்யா UK வின் ஆசிரியராக இருக்கும் மிர்ஸா நஸீர் அஹ்மத் சாஹிப் சிட்டி மஸீஹ் அவர்களின் துணைவியாரான மதிப்பிற்குரிய ஸரீனா அக்தர் சாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் கடந்த மாதம் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ

இவர்களும் சஹாபாவின் சந்ததிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். மிகவும் பொறுமைசாலியாகவும் நன்றி செலுத்தக்கூடியவராகவும் இருந்தார்கள். தமது பெற்றோர், மாமனார், மாமியார் ஆகிய அனைவருக்கும் தொண்டு செய்வதற்கான உரிமையை இவர்கள் நிறைவேற்றினார்கள்.

வாழ்வை அர்ப்பணித்திருந்த கணவரோடு நன்றியுணர்வோடும், போதும் என்ற மனப்பான்மையோடும் வாழ்க்கை கழித்து வந்தார்கள். கானாவில் இருந்தபோது மிகவும் மோசமான பொருளாதார நிலை இருந்தபோதும் மிகவும் பொறுமையோடும் நன்றியுணர்வோடும் பிள்ளைகளுடன் இவர்கள் வாழ்வைக் கழித்தார்கள். ஒருபோதும் நாவில் முறையீட்டைக் கொண்டு வந்ததில்லை. மர்ஹூமா மூஸியாவாக இருந்தார்கள். இவர்களின் ஒரு மகன், மிர்ஸா தவ்க்கீர் அஹ்மத் சாஹிப் வாழ்வை அர்ப்பணித்தவராவார். MTA வில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய ஹாஃபிழ் முஹம்மத் அக்ரம் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் இதே மாதம் தாஹிர் ஹார்ட் மருத்துவமனையின் 80 வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ

இவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத், ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மூலமாக வந்தது. அதற்குப் பிறகு இவர்களின் தந்தைவழிப் பாட்டனார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் கடிதம் மூலமாக பைஅத் செய்தார்கள். கையில் பைஅத் நடைபெறவில்லை. ஆயினும் எழுத்து ரீதியாக பைஅத் செய்தார்கள். இவர்களின் ஒரு மகள்வழிப் பேரர் அப்துல் கபீர் ரிஸ்வான் இங்கு UK வில் PS அலுவலகத்தில் தொண்டாற்றி வருகிறார்கள்.

இவர்களும் ஜமாஅத்துக்குத் தொண்டாற்றுவதற்காகத் தம்மை அர்ப்பணித்தார்கள். சான்றொப்பத்திற்காக ஃபய்ஸ்லாபாத் மாவட்டத்தின் முன்னாள் அமீர் முஹம்மத் அஹ்மத் சாஹிப மஸ்ஹர் அவர்களிடம் சென்றபோது, அவர்கள் கூறினார்கள்: நீங்கள் மார்க்கத்திற்கு தொண்டாற்றப் போகிறீர்கள். நீங்கள் இங்கு என்னிடம் மார்க்கத் தொண்டாற்றுங்கள். பிறகு அங்கு ஃபைஸலாபாத் ஜமாஅத்தில் ஊழியராக இவர்கள் வாழ்நாள் முழுவதையும் கழித்து விட்டார்கள். எப்பொழுதும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினார்கள். இவ்வாறே தம்மைப் புரிந்தார்கள். மூஸியாக இருந்தார்கள். தமது (ஹிஸ்ஸா ஜாயிதாத்) சொத்தின் பங்கையும் வாழ்நாளிலேயே செலுத்தி விட்டார்கள். மிக அதிகமாக, முறையாக தஹஜ்ஜுத் தொழக்கூடியவராக இருந்தார்கள். ஃபய்ஸ்லாபாத்தில் பல பிள்ளைகளுக்கு இவர்கள் திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பதற்கும், மனனம் செய்ய வைப்பதற்கும் நல்வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். தமது சிறிய மகனையும் திருக்குர்ஆன் மனனம் செய்ய வைத்தார்கள்.

அடுத்த குறிப்பு மதிப்பிற்குரிய சவுத்ரி நூர் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் கடந்த நாட்களில் 82 வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ

இவர்கள் காதியானைச் சேர்ந்த தர்வேஷ் சவுத்ரி முஹம்மத் அப்துல்லாஹ் சாஹிப் அவர்களின் மூத்த மகனாவார்கள். இவர்களின் 2 மகன்கள் அல்லாஹ்வின் அருளால் வாழ்வை அர்ப்பணித்தவர்களாக உள்ளார்கள். ஒருவரோ நமது லைபீரியாவின் பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியராக இருக்கிறார்கள். மன்ஸூர் அஹ்மத் நாஸிர் சாஹிப்.

மஸ்ரூர் அஹ்மத் முஸஃப்பர் கானாவில் உள்ளார்கள். முபல்லிக் ஆக இயக்கத்திற்குத் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பை பெறுகிறார்கள். இந்த 2 மகன்களும் செயல் களத்தில் இருந்ததன் காரணமாக தமது தந்தையாரின் ஜனாஸாவில் கலந்து கொள்ளவில்லை. மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள்.

அடுத்த ஜனாஸா, ஹக்கிம் உபைதுல்லாஹ் மின்ஹாஸ் சாஹிப் அவர்களின் மகன் மதிப்பிற்குரிய மஹ்மூத் அஹ்மத் மின்ஹாஸ் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் கடந்த மாதம் 75 வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ

இவர்களின் ஒரு மகன், ராஷித் மஹ்மூத் மின்ஹாஸ் முபல்லிக் ஆவார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: மர்ஹூம் ஓர் ஏழ்மை பண்புடைய மனிதராக இருந்தார்கள். எண்ணற்ற சிறப்புகளுக்கு உரியவராக இருந்தார்கள். முறையாக தஹஜ்ஜுத் தொழக்கூடியவராக இருந்தார்கள். கிலாஃபத்துக்காக மாய்ந்து போகக்கூடியவராக இருந்தார்கள். வறியவர்கள், ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு ஒவ்வொரு கணமும் ஆயத்தமாக இருந்தார்கள்.

இவர்களின் இந்த மகனும் கானாவில் செயல் களத்தில் இருந்ததன் காரணமாக ஜனாஸாவில் கலந்து கொள்ளவில்லை. இவ்வாறே இரண்டாவது மகன் மலேஷியாவில் இருந்ததன் காரணமாக கலந்து கொள்ளவில்லை.

அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும், இந்த மர்ஹூம்களின் சந்ததிகளுக்கும் இவர்களின் உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் பொறுமையும், மன தைரியத்தையும் வழங்குவானாக. இவர்கள் அனைவரின் அந்தஸ்தையும் உயர்த்துவானாக. பாவமன்னிப்பு வழங்கி கருணையோடு நடந்து கொள்வானாக. ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்களின் ஜனாஸா தொழுகை தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

(தமிழாக்கம்: மவ்லவி அதாவுல் முஃக்னி)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad